சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2025 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை

(திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் பங்குனித் திங்கள் 04 ஆம் நாள்)

அசல் வழக்குஎண். 61/2024

CNR.No. TNCB190003322024

பாரத ஸ்டேட் வங்கி, காரமடை கிளை, அலுவலக முகவரி, எஸ்.எப். நெ.14,16, கிழக்கு ரத வீதி, காரமடை, கோயமுத்தூர், வங்கிக்காக அதன் கிளை மேலாளர்

....வாதி

-இடையே-

1. எம். ஆலியாதகாசின், த/பெ. முகம்மது சித்திக், முஸ்லீம், வயது சுமார் 26, வசிப்பிட முகவரி கதவு எண் .138, வி. ஆர். பி. காலனி, கன்னார்பாளையம் ரோடு, காரமடை - 641104.

2. எம். முகம்மது சித்திக், த/பெ. முகம்மது உசேன், முஸ்லீம், வயது சுமார் 59, வசிப்பிட முகவரி கதவு எண் .138, வி. ஆர். பி. காலனி, கன்னார்பாளையம் ரோடு, காரமடை - 641104. ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு 25.04.2024 -ம் தேதி முடிய ரூ.2,60,468/- கடன் பாக்கித் தொகையை தாவா தாக்கல் செய்த நாளில் இருந்து வாங்கிய கடனுக்கு தற்போதைய வட்டி வருடத்திற்கு 11.30 சதவீதம் செலுத்த உத்தரவிடக்கோரியும், வாதிக்கு பிரதிவாதிகள் செலவுத் தொகையுடன் கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் - 03.06.2024

வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் - காரமடை கிராமம் மேட்டுப்

பாளையம் தாலூக்கா , நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் 04.09.2015, 05.11.2015, 17.08.2015, 23.10.2018, 22.09.2021, 07.05.2024, 10.05.2024, 08.05.2024 ஆகிய தேதிகளிலும் அதன் பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பீட்டு விபரம் - நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ .2,60,468/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்புச் சட்டம் பிரிவு 22-ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.7,815/- செலுத்தப்பட்டுள்ளது.

## DETAILS OF VALUATION

| | | |
|---|---|---|
| Principal amount due to the plaintiff as per Statement of Account as on 25.04.2024 | - | Rs.2,60,468/- |
| Court fee paid under section 22 of Tamil Nadu Court Fee & S.V.Act | - | Rs. 7,815/- |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு .எம். ரவி, அவர்கள் முன்னிலையாகியும் , பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

### தீர்ப்பாணை

1. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா தொகை ரூ. 2,60,468/- ம் மற்றும் ரூ .1,66,000/-க்கு வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீதம் வட்டியும் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள் வரை 6 சதவீதம் பின் வட்டியும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வாதிக்கு பிரதிவாதிகள் வழக்கு செலவுத் தொகையாக ரூ. 10,452/- கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>செலவுத் தொகை பட்டியல்</u>

| வாதி தரப்பில் | | | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|---|---|
| தாவாவிற்கு ஸ்டாம்ப் | - | ரூ. 7,815/- | --இல்லை-- |
| வக்காலத்துக்கு ஸ்டாம்ப் | - | ரூ. 20/- | |
| கட்டளைதாரர்க்கு ஸ்டாம்ப் | - | ரூ. 20/- | |
| பிராசஸ்க்கு ஸ்டாம்ப் | - | ரூ. 20/- | |
| வழக்கறிஞர் கட்டணம் (சீ) | - | ரூ. 2,577/- | |
| | | ------------------------ | |
| மொத்தம் | - | ரூ. 10,452/- | |
| | | ------------------------ | |

2025 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 18- ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,